**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 11.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 62/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-1 |
| **சாட்சியின் பெயர்** | : | அபிக்கண்ணன் |
| **தந்தை பெயர்** | : | அன்பழகன் |
| **கிராமம்** | : | வீச்சூர் |
| **தாலுக்கா** | : | வலங்கைமான் |
| **தொழில்** | : | டிரைவர் |
| **வயது** | : | 25 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் படையாச்சி வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த

01.01.2025 ம் தேதி இரவு சுமார் 1 மணிக்கு மேல் குடவாசலிருந்து வீட்டிற்கு எனது இருசக்கர வாகனத்தில் நானும், எனது தம்பி சஞ்சைய், சந்தோஷ் ஆகியோர்கள் விடையல் கருப்பூர் மெயின் ரோட்டில் வந்துக் கொண்டிருந்தபோது முருகன் கோவில் பஸ் நிறுத்தும் இடத்தில் 1ம் எதிரி ஹரிஹரண், 2-ம் எதிரி முகேஷ், 3 ம் எதிரி சிவராம், 4 ம் எதிரி சூரியபிரகாஷ், 5-ம் எதிரி திவாகர் ஆகியோர்கள் ரோட்டை மறைத்து புத்தாண்டை முன்னிட்டு டான்ஸ் ஆடிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் வரும்போது ஆய்,ஓய் என்று சத்தம் போட்டுக்கொண்டு எங்களை பார்த்து குச்சிகாரி மவனே, தேவடியா மவனே என்று பேசினார்கள். நாங்கள் வண்டியை நிறுத்தி ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டோம் அப்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் இது எங்கள் ஊர் ரோடுடா பற பயலுக்கு இங்க என்னடா வேலை என்று பேசினார்கள். அப்போது 1ம் எதிரி ஹரிஹரன், 2-ம் எதிரி முகேஷ், 3 ம் எதிரி சிவராம், 4 ம் எதிரி சூரியபிரகாஷ், 5-ம் எதிரி திவாகர் ஆகியோர்கள் என்னையும், எனது தம்பி சஞ்சையையும் கருவை கட்டையால் அடித்தார்கள். நீதிமன்றத்தில் காட்டப்படும் ஐந்து கட்டைகள் எதிரிகள் அடித்த கட்டைகள் ஆகும். அந்த 5 கட்டைகள் **சா.பொ-1 வரிசை** குறியீடு செய்யப்படுகிறது. சந்தோஷ் என்பவர் சண்டையை விலக்கி விட்டார். பின்னர் சந்தோஷ் தகவல் கொடுத்து வந்த எனது நண்பர்கள் என்னையும், எனது தம்பியையும் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன் பின்னர மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள். அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். சிகிச்சையில் இருந்தபோது வலங்கைமான் காவல் நிலையத்தில் இருந்து வந்து போலீசார் விசாரித்தார்கள். நடந்த விபரம் சொன்னேன். போலீசார் எழுதிக்கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் இட்டேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ-1** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. அதன் பின்னர் 04.01.2025 அன்று நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் வலங்கைமான் காவல் நிலையத்தில் வந்து விசாரித்தார்கள். நடந்த விபரம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.11 18:28:08 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.